**கூடுதல் சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திரு.எம். பரமசிவம்.எம்.காம்.,எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி**

**OS.No.264/2024**
**தேதி: 04.08.2026**
**பி.சா.1 கீர்த்திவாசன்**
**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் டிம்பளமோ மெக்கானிக் இன்சினியரிங் படித்துள்ளேன். நான் உத்திரை கீழ வீதியில் 25 ஆண்டுகளா குடியிருந்து வருகிறேன். உத்திரை கீழ வீதியில் வசித்து வந்த மணிபாரதி, ஆனந்தி, இறந்த மணிபாரதியன் மற்ற வாரிசுகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் ஜெயா என்பவர் வசித்து வந்தார். மேற்படி ஜெயா என்பவரும் தாவா சொத்தில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வந்தார்கள். வாதி என்ன வழக்கு போட்டுள்ளார் என்று எனக்கு தெரியும். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யதுள்ளார்கள் என்றால் அவர் நாங்கள் தாவா சொத்தை ஆக்கிரமித்து கொண்டோம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்தில் எனக்கு எந்த தனிப்பட்ட உரிமையும் கிடையாது. தாவா சொத்து 2893 சதுரடி ஆகும். ஜெயா என்பவர் மணிபாரதிஎன்பவருக்கு எழுதிகொடுத்த கிரய ஆவண எண்.917/2005 தேதி 20.07.2005 மற்றும் அசல் வழக்கு எண்.83/2010 ன் படி கிரய ஆவணஎண்.2099/2010 ஆவணங்களின்படி 2893 சதுரடி உள்ளது என்பதை தெரிந்துகொண்டேன். இந்த ஆவணத்தை நான் எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் பிரபாகரன் வழக்கு தொடுத்தன்பேரில் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி ஆவணங்களை 25.11.2024ல் கட்டணம் செலுத்தி பெற்றபோது தெரிந்துகொண்டேன். இந்த ஆவணங்களின் நகல்களை நான் நீதிமன்றத்தில் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளேன். வாதி என்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்று தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ.1 ஆனந்தி என்பவர் வாதியிடம் தாவா சொத்து சம்மந்தமாக ஒரு கிரய உடன்படிக்கை 19.08.2014 ஏற்படுத்தி கொண்டார். வா.சா.ஆ.1ல் நத்தம் சர்வேஎண்.138/2 மற்றும் 138/10, அடங்கிய 4320 சதுரடிக்கு கிரய உடன்படிக்கையை பெற்றுள்ளார். அந்த வா.சா.ஆ.1ல் நான்கெல்லை எனதான கொல்லைக்கு கிழக்கு, சம்மந்த வகையறா கொல்லை வால்வீச்சுக்கு வடக்கு, தெருவுக்கு மேற்கு, தேவகி வீடு கொல்லை வால்வீச்சுக்கு தெற்கு என காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த நான்கெல்லைக்கு உட்பட்டது 4320 சதுரடி என்றால்

சரியல்ல. தாவா சொத்தின் கீழ புறம் உத்திர கீழ வீதி ஆகும். வடபுறம் தேவகி வீடும் கொல்லையும் உள்ளது. அந்த வீடு ஓட்டு வீடாகும். அதனுடைய சுவர் தென்புற தாய் சுவராகும். தென்புறம் சம்மந்த வீடு உள்ளதா என்றால் காட்டேரி கோவில் சந்து மற்றும் சம்மந்த வீடு உள்ளது. அந்த சந்தின் முன்புறம் 8 அடி பின்புறம் 12 அடி அதற்கும் பின்புறம் 42 அடி அகலம் 12 நீளம் ஆகும். இந்த அளவு கொண்ட காட்டேரி கோவில் விஸ்தீரணத்திற்கு நான் எந்த ஒரு ஆவணமும் பாரத்ததில்லை. வழக்கிற்கு பிறகு அது சம்மந்தமாக வருவாய்துறை ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அது சம்பந்தமாக பட்டாவை பார்த்தேன் அது காட்டேரி கோவில் பெயரில் இல்லை. அந்த இடத்திற்கு பட்டாவே கிடையாது.அது அரசு புறம்போக்கு இடமாகும். அது அரசு புறம்போக்கு என நிரூபிப்பதற்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தற்சமயம் சாட்சி யூடிஆர் FMB தாக்கல் செய்துள்ளேன். அந்தயூடிஆர் FMB யில் காட்டேரி கோவில் பட்டாதாரர் என்று எந்த விவரமும் இல்லை என்றால் சரிதான். அது காலிமனையாகத்தான் உள்ளது. அந்த காலிமனையை பொறுத்தவரை எனக்கு தனிப்பட்ட முறையில் எந்த பாத்தியமும் இல்லை. வாதி 1,2 மற்றும் 4, 5 வரை உள்ள பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செயதுள்ளார். பிரதிவாதிகள் அனைவரும் தனிபட்ட நபர்கள்தான். தாவா சொத்தை பொறுத்து மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்திருந்தோம் அதன் அடிப்படையில் வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் அளந்து இருவரையும் சமாதானம் பேச அழைத்தார்கள் ஆனால் வாதி நீதிமன்றத்தில் பார்த்துகொள்வதாக சொல்லிவிட்டார். மேற்படி வட்டாட்சியரோ, மாவட்ட ஆட்சியரோ தாவா சொத்து சம்மந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்கு முன்பே குத்தாலம் காவல் நிலையத்தில் வாதி பெயரில் புகார் கொடுத்தோம். அதை விசாரித்த காவல் துறையினர் இரு தரப்பினரையும் தாவா சொத்து சம்மந்தமாகஎந்த பிரச்சனையையும் செய்ய கூடாது என எழுதி வாங்கி கொண்டனர். அந்த சமயத்தில் எழுத்து பூர்வமாக வழிபாடு செய்து கொள்ளலாம் என எழுதி வாங்கி கொண்டனர். இது தொடர்பான விவரங்களை நான் எனது எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளேன். 1ம் பிரதிவாதி குத்தாலம் தேரடி தெருவில் உள்ளார். இந்த எதிர்வழக்குரைக்கு நான்தான் விவரம் சொன்னேன். நான் சொல்லவது போல் தாவாசொத்தில் தென்புறம் காட்டேரி கோவில் என்கிற இடமே கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதுவும் எனக்கு நேரடியாக எந்த ஒரு தொடர்பும் கிடையாது. நான் எனது தெருவில் தனது செல்வாக்கை காண்பிக்க வாதியின் சொத்தில் அத்துமீறி மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து உள்ளே நுழைய முயற்சித்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை

பொறுத்தவரை எனக்கு எந்த தொடர்பும் இல்லை என்றும், வீண் கட்சியாடி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் பாரபரியமாக காட்டேரி கோவிலில் சாமி தரிசனம் செய்துவருகிறோம் என்பதனை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தான 4320 சதுரடி வாதிக்கு பாத்தியப்பட்டது எனவும், அதில் எனக்கு எந்த விதமான உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் ஆங்கிலத்தில் இருப்பதால் அதில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

கூடுதல் சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.